நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2014

தரம் : உயர் நிலை
Level : Advanced

June 2014

வினாக்கள் : 60
வழங்கப்படும் நேரம் : 70 நிமிடங்கள்
(வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

**வினாக்கள்: 1 - 10. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்குச் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

இன்று உலகம் வேண்டி நிற்கும் "யாவருக்கும் கல்வி" என்ற சிந்தனை திருக்குறளிலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டது என்று கூறுகிறார்கள். திருக்குறள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்றாலும் திருக்குறளில் கூறப்பட்டவை என்றும் பொருந்துவனவாக, இன்றும் வரவேற்கப்படுவனவாக அமைந்துள்ளமை அதன் சிறப்பே.

கல்வி வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படும் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான பண்பாட்டு அமையத்தின் (UNESCO) சர்வதேச ஆணைக்குழு 21ஆம் நூற்றாண்டுக்கென விதந்துரைத்த கல்வித் தேவைகள் அனைத்தும் திருக்குறளில் காணப்படுகின்றன. யுனெஸ்கோ இக் கல்வித் தேவைகள் நான்கு என வலியுறுத்தி, அவற்றைக் கல்வியின் நான்கு தூண்களாகச் சிறப்பித்துள்ளது.

திருக்குறளின் கல்வி அதிகாரத்தில் (அதி.40) உள்ளவை யாவும் வாழ்நாட் கல்விக்கும் திறனாய்வுக் கல்விக்கும் வழி காட்டுகின்றன. யாவரும் கற்க! என்று விளித்துக் கூறுவதன் மூலம் யாவரும் கட்டாயம் கற்க, தொடர்ந்து கற்க, கற்க வேண்டியவற்றைக் கற்க என்று பல விளக்கங்களைத் தந்து நிற்பதாக மு. வரதராசன் குறிப்பிடுவார்.

அறிதலுக்காகக் கற்றல், செயலாற்றக் கற்றல், வாழக் கற்றல், சேர்ந்து வாழக் கற்றல் என்று யுனெஸ்கோ கூறும் கல்வித் தேவைகளைத் திருக்குறள் நிறைவு செய்கிறது. அறிதலுக்காகக் கல்வி கற்றலைக் கூறிய வள்ளுவர், ஒருவனால் கற்க முடியாவிட்டாலும் கற்றறிந்தோரிடமிருந்து நல்ல விடயங்களைக் கேட்டுத் தெரிந்து அறிவு பெறலாம் என்கிறார். இது வரன் முறைக் கல்வி மரபினைத் தாண்டி நியமமற்ற முறையில் வாழ்நாட் கல்வியாகவும் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெளிய வைக்கிறது.

யுனெஸ்கோ கூறும் கல்வியின் இரண்டாவது தூண் செயலாற்றக் கற்றல் ஆகும். செயலாற்றக் கற்றல் என்பது ஒருவன் தனது வாழ்வினைச் செவ்வனே நடத்துவதற்குத் தேவையான பொருளாதாரத்துக்கான திறனை வளர்த்திட உதவும் கல்வி, தனது சமூகத்திற்கு உதவிட வழிகாட்டும் கல்வி என்று கூறலாம். திருக்குறளில் வினைத்திட்பம், காலமறிதல், வலியறிதல், வினை செயல்வகை ஆகிய அதிகாரங்கள் யாவும் செயலாற்றுகைக் கல்விக்கு வழிகாட்டுகின்றன.

யுனெஸ்கோ சுட்டுகின்ற மூன்றாவது கல்வித்தூண் வாழக்கற்றல் என்பது, மற்றவர்களைப் புரிந்து கொண்டு, இணங்கி சமூகத்தில் வாழ்தலைக் குறிக்கிறது. இதனைத் திருக்குறள் தனது பாணியில் 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்று கூறுகிறது.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவி லாதார்" என்பது திருக்குறள்.

மற்றவர்களை மதித்து வாழல், மற்றவர்களுக்கு உதவி வாழல், வேற்றுமைகளில் ஒற்றுமை கண்டு வாழல் என்பன உண்மையான வாழக்கற்றல் முறைகளாகும்.

சேர்ந்து வாழக் கற்றல் என்பது யுனெஸ்கோ கூறும் நான்காவது கல்வித் தூண் ஆகும். ஒருவரை ஒருவர் புரிந்து, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, ஒவ்வொருவருக்கும் மதிப்பளித்து குழுவாகச் செயற்பட்டு வாழ்வில் வெற்றி காணக் கூடிய கல்வியினை, சேர்ந்து வாழக்கற்றல் குறிக்கிறது. திருக்குறளில் இல்வாழ்க்கை, மக்கட் பேறு, அன்புடைமை, வாழ்க்கைத் துணைநலம், விருந்தோம்பல், இனியவை கூறல் என்ற பல அதிகாரங்கள் வாழ்வின் உயர்வைக் கூறி அதற்கான வழியினைக் காட்டுகின்றன.

திருக்குறள் ஒரு குறித்த காலத்துக்கான அல்லது குறித்த சமூகத்துக்கான கல்விக் கோட்பாட்டினை வகுக்காது எல்லோருக்குமான, மாறிவரும் உலகத் தேவைகளுக்குமான என்றும் பொருந்துவதான கல்விக் கோட்பாட்டினையே காட்டி நிற்கிறது.

(திருக்குறள் கட்டுரை மஞ்சரி - திருக்குறள் காட்டும் கல்வி)

1. வள்ளவர் ஆரம்பித்து வைத்த கல்விச் சிந்தனை

a) செல்வந்தர்க்குக் கல்வி
b) வறியோர்க்குக் கல்வி
c) உள்ளோர்க்குக் கல்வி
d) யாவருக்கும் கல்வி

2. யுனெஸ்கோ - UNESCO என்பது

a) ஐக்கிய நாடுகள் சபை
b) ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை
c) ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டு அமையம்
d) கல்வி விஞ்ஞான பண்பாட்டு அமையம்

3. "யாவரும் கற்க" என்பதற்கு மு. வரதராசன் கூறுவது

a) யாவரும் கட்டாயம் கற்க
b) யாவரும் தொடர்ந்து கற்க
c) யாவரும் கற்க வேண்டியதைக் கற்க
d) மேற்கூறிய யாவும் சரி

4. "நியமமற்ற" என்பது

a) வரன்முறையானது
b) வரன்முறையற்றது
c) திட்டமிடப்பட்டது
d) பாடவிதானத்திற்கு உட்பட்டது

5. செயறாற்றக் கற்றல் என்பதைத் திருக்கறளில் காண்பது:

a) வினைத்திட்பம், காலமறிதல், வலியறிதல், வினைசெயல் வகை அதிகாரங்களில்
b) வினைத்திட்பம், இல்வாழ்க்கை, அன்புடைமை அதிகாரங்களில்
c) வினைத்திட்பம், வான்சிறப்பு, அறன்வலியுறுத்தல் அதிகாரங்களில்
d) வினைத்திட்பம், துறவு, விருந்தோம்பல் அதிகாரங்களில்

6. யுனெஸ்கோ கூறுகின்ற முதலாவது கல்வித் தூண்

a) வாழக்கற்றல்
b) செயலாற்றக் கற்றல்
c) அறிதலுக்காகக் கற்றல்
d) சேர்ந்து வாழக் கற்றல்

7. வாழக்கற்றலைத் திருக்குறள் காட்டும் பாணி

a) “அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை”
b) “உலகத்தோடு ஒட்ட ஒழுகல்”
c) “பசும்புல் தலைகாண்பது அரிது”
d) “அந்தணர் என்போர் அறவோர்”

8. விதந்துரைத்த என்பது:

a) விரைந்து சொன்ன
b) வியப்புற்றுச் சொன்ன
c) புகழந்து கூறிய
d) எடுத்துக் கூறிய

9. சேர்ந்து வாழக்கற்றல் மூலம் ஒருவருக்குக் கிடைப்பது

a) ஒருவரை ஒருவர் புரிந்து வாழும் பண்பு
b) ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் பண்பு
c) ஒருவருக்கொருவர் மதிப்பளித்து குழுவாகச் செயற்படும் பண்பு
d) மேற்கூறிய யாவும்.

10. திருக்குறள் கூறும் கல்விக் கோட்பாட்டின் சிறப்பு

a) அது ஒரு குறித்த காலத்துக்கானது அல்ல
b) அது ஒரு குறித்த சமூகத்துக்கானது அல்ல
c) எல்லோருக்குமானது, மாறிவரும் உலகத்தேவைகளுக்கேற்றது
d) மேற்கூறிய யாவும் சரி

**வினாக்கள் 11 - 15 கீழே வரும் கவிதையைப் படித்து அதன் கீழ் வரும் வினாக்களுக்குச் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

ஊரெங்கும் ஓடிக் கொண்டிருக்கிறது
மீன்கள் செத்த நதியொன்று
மீன்கள் செத்ததற்கும்
மீன்கள் மிதப்பதற்கும் நதிதான் காரணம்.

பெட்டைக்கோழி போல
ஊரை அடைகாத்த நதியது.
மடல்கள் விரித்தாடும் யானை போன்ற
கம்பீரமான நதியது.

மானை விழுங்கிய மலைப் பாம்புபோல்
வயிறு பெருத்தோடிய நதிக்கு
எல்லாம் தெரியும்.

பெருவெள்ளமென ஆர்ப்பரித்து
ஆரவாரம் செய்த நதியிப்போது
வயது முதிர்ந்து மெலிந்து தளர்ந்து
படமெடுக்க முடியாமல் சுருண்டு கிடக்கும்
பாம்பு போல் கிடக்கிறது.

11. ஊரைக் காத்த நதிக்கு உவமையாகச் சொல்லப்பட்டது
   a) யானை
   b) மலைப்பாம்பு
   c) பெட்டைக் கோழி
   d) மீன்கள்

12. கம்பீரமான என்பது
   a) தோற்றப் பொலிவுடைய
   b) வீரமான
   c) பயம் மிகுந்த
   d) கோழைத்தனமான

13. ஒருகாலத்தில் நீர்ப்பெருக்குடன் நதி ஓடியது என்பதை விளக்கும் தொடர்:
   a) மடல்கள் விரித்தாடும் யானை
   b) வயிறு பெருத்தோடிய நதி
   c) பெட்டைக் கோழி
   d) மானை விழுங்கிய மலைப்பாம்பு

14. வயது முதிர்ந்து மெலிந்து தளர்ந்து என்ற சொற்றொடர் விளக்குவது:

a) படமெடுக்க முடியாமல் சுருண்டு கிடக்கும் பாம்பை
b) மானை விழுங்கிய மலைப்பாம்பை
c) மடல்கள் விரிதாடும் யானையை
d) ஓடிக்கொண்டிருக்கும் நதியை

15. ஆர்ப்பரித்து என்பது

a) அழுது கொண்டு
b) பெரிய சத்தமிட்டு
c) அடங்கிக் கொண்டு
d) இவையாவும் சரி

**வினாக்கள் 16 - 20**
**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான பதிலைத் தெரிவு செய்க**

16. தமிழ் இலக்கிய வரலாற்றில் அறநூல்களும் நீதிநூல்களும் பெருவாரியாக எழுந்த காலம்.

a) சங்க காலம்
b) சங்கமருவிய காலம்
c) பல்லவர் காலம்
d) சோழர் காலம்

17. ஆயர்கள் வாழ்ந்த முல்லை நிலம்

a) காடும் காடு சார்ந்த இடமும்
b) மலையும் மலைசார்ந்த இடமும்
c) வயலும் வயல் சார்ந்த இடமும்
d) கடலும் கடல் சார்ந்த இடமும்

18. சிறு காப்பியங்களில் ஒன்று

a) பெரிய புராணம்
b) நீலகேசி
c) வளையாபதி
d) இராமாயணம்

19. பரணிப் பிரபந்தம் பாடுவதில் சிறந்தவராகப் போற்றப்பட்ட சோழர்காலப் புலவர்

a) கம்பர்
b) ஒட்டகக் கூத்தர்
c) புகழேந்தி
d) செயங்கொண்டார்

20. வசைக்கவி பாடுவதில் சிறந்தவராகச் சொல்லப்பட்டவர்

a) காளமேகப் புலவர்
b) இரட்டையர்கள்
c) பிரம்மராயர்
d) கபிலர்

**வினாக்கள் 21 - 25**
**கீழே தரப்படும் இலக்கண வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21. பொரியல் என்ற சொல்

a) வினைச் சொல்
b) தொழிற்பெயர்ச் சொல்
c) குணப்பெயர்ச் சொல்
d) இடைச் சொல்

22. தா என்ற வினையடியின் எதிர்கால ஆண்பால் வினைமுற்று

a) தருவான்
b) தருகிறான்
c) தந்தான்
d) தருபவன்

23. மாணவன் என்ற பெயாச்சொல்லின் நான்காம் வேற்றுமை வடிவம்

a) மாணவனை
b) மாணவனால்
c) மாணவனுக்கு
d) மாணவனே

24. "நாளங்காடி" என்பது

a) பகற்சந்தை
b) இரவுச்சந்தை
c) பிரதான சந்தை
d) சிறுசந்தை

25. முள் + புதர்

a) முள்புதர்
b) முள்பதர்
c) முற்புதர்
d) முட்புதர்

**வினாக்கள் 26 - 30**

**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

26. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை எனக் கூறப்படுபவர்
    - a) கம்பர்
    - b) மறைமலை அடிகள்
    - c) மு. வரதராஜன்
    - d) எஸ் வையாபுரிப்பிள்ளை

27. வீரமாமுனிவர் பாடிய காவியம்
    - a) சிந்தாமணி
    - b) பரமார்த்த குரு கதை
    - c) தேம்பாவணி
    - d) தெனாலிராமன் கதை

28. குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியவற்றை நமக்குத் தந்தவர்
    - a) பாரதிதாசன்
    - b) பாரதியார்
    - c) புதுமைப்பித்தன்
    - d) ரா. கிருஷ்ணமூர்த்தி

29. கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தியால் எழுதப்பட்ட சிறப்பு மிக்க வரலாற்று நாவல்கள்
    - a) பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன்
    - b) சிவகாமியின் சபதம், நந்திபுரத்து நாயகி, தென்றல்
    - c) பார்த்திபன் கனவு, கடற்புறா, வேங்கையின் மைந்தன்
    - d) வேங்கையின் மைந்தன், பொன்னியின் செல்வன், கடற்சீமை

30. "துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?" என்ற பாடலை எழுதியவர்
    - a) பாரதிதாசன்
    - b) கண்ணதாசன்
    - c) வாலி
    - d) வைரமுத்து

**வினாக்கள் 31 - 35**

**பின்வரும் கூட்டத்தில் வேறுபட்டு நிற்பதைக் கண்டு பிடியுங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| 31. | a) இராமன் | b) தருமன் | c) கர்ணன் | d) அர்ச்சுனன் |
| 32. | a) ஆழி | b) கடல் | c) குளம் | d) பரவை |
| 33. | a) கண்ணதாசன் | b) வைரமுத்து | c) பா. விஜய் | d) முத்துக்குமார் |
| 34. | a) மதுரை | b) தஞ்சாவூர் | c) சென்னை | d) பூம்புகார் |
| 35. | a) மெல்லினம் | b) தென்றல் | c) தமிழோசை | d) விகடன் |

**வினாக்கள் 36 - 40**

**கீழ்வரும் தமிழ் எழுத்துக்கள் பற்றிய வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

36. உயிர் எழுத்துக்களில் நீண்டு ஒலிப்பவை
    a) 3 b) 5 c) 7 d) 9

37. பின்வருவனவற்றில் இடையி வகையை சாராத எழுத்து
    a) ல b) ந c) ழ d) ள

38. சுட்டு எழுத்துக்கள் எவை?
    a) அ, இ, உ b) அ, இ, உ, எ, ஒ c) ஆ, ஈ, ஊ d) ஏ, ஓ, ஔ

39. வல்லின உயிர் மெய் எழுத்து ஒன்று
    a) கோ b) லோ c) னோ d) ழோ

40. உயிர் மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
    a) 206 b) 216 c) 246 d) 247

**வினாக்கள் 41 - 45**

**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

41. அண்மையில் வெளியீட்டு விழா கண்ட 'அன்பின் ஆழம்' நூலின் ஆசிரியர்
    a) எஸ். பொன்னுத்துரை
    c) திருமதி தேவகி கருணாகரன்
    b) கலாநிதி ஆசி கந்தராஜா
    d) சௌந்தரி கணேசன்

42. சிட்னியில் வள்ளுவர் சிலை அமைந்துள்ள வளாகம்
    a) சிட்னி முருகன் கோயில்
    b) சிட்னி துர்க்கை அம்மன் கோவில்
    c) சிட்னி கற்பக விநாயகர் ஆலயம்
    d) இவை எல்லாம்

43. தமிழகத்தின் செல்லக்குரல் தேடல் என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியின் குரல் நிபுணர்
    a) குன்னக்குடி வைத்தியநாதன்
    c) அனந்த் வைத்தியநாதன்
    b) ஏ. ஆர் ரஹ்மான்
    d) இளையராஜா

44. முகநூல் என்பது
    a) மின்னூடகம்
    b) அச்சு ஊடகம்
    b) சமூக வலைத்தளம்
    d) இவை எதுவும் இல்லை

45. "Franchise" என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்
    a) வியாபார உரிமை
    c) வியாபாரத் தொடர்
    b) வியாபார மையம்
    d) வியாபார நுட்பம்

**வினாக்கள் 45 - 50**

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை அறிந்து விடைத்தாளில் குறிப்பிட்ட இலக்கத்திற்கு எதிரே எழுதுக.**

உலகின் மிக சுவாரசியமான நுணுக்கமான உயிரினம் தேனீ. உருவத்தில் சிறியதாக இருக்கும் தேனீ தான் உலகின் மிகச் சிறந்த மகரந்தச் சேர்க்கையாளர். தென்னை, வாழை மரங்கள் முதல் தக்காளி, கத்தரி, கோப்பிச் செடிகள் என்றும், உணவுத் தானியப் பயிர்கள் என்றும் பல கோடி (45) __________________ சேர்க்கைகளுக்குக் காரணமாக இருக்கும் தேனீக்களே, உலகின் 80 சதவீத உணவுப் பொருட்களின் பெருக்கத்துக்கும் காரணம் ஆகும்.

தேனீயின் தகவல் பரிமாறல் முறை ஸ்கைப் (Skype) வாட்ஸ் அப் (Whats up) முறைகளை விடத் துல்லியமானது. யானை, ஆமை ஆகியவற்றை விடவும் மிகக் கூர்மையான (47) __________________ கொண்டவை தேனீக்கள். ஆனால் இன்று (48) __________________ உயிரினங்கள் பட்டியலில் தேனீக்கள் இடம் பெற்றிருப்பது அதிர்ச்சி தரும் விடயமல்லவா. தேனீக்களின் அறிவும், சுறு சுறுப்பும் அபாரமானவை. ராணித் தேனீ முட்டை இடும். ஆண் தேனீக்கள் கூட்டைப் பாதுகாக்கும். பணித் தேனீக்கள் (49) __________________ சேகரிப்பு, தேன் கூடு கட்டுவது, தேனைப் பக்குவப்படுத்துவது, கூட்டைச் சுத்தமாகப் பராமரிப்பது என்று எல்லா வேலைகளையும் செய்யும்.

தேனீக்கள் அதிகம் இருக்கின்ற இடத்திலே இயற்கையாகவே (50) __________________ உருவாகி விடும். உலகில் பசுமையை வளர்த்தெடுப்பதில் தேனீக்கள் முதன்மையானவை. "தேனீக்கள் மறைந்து விட்டால் மனிதன் வாழ்வதற்கு நான்கு ஆண்டுகளுக்கு மேல் இருக்காது" என்று ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் சொல்லியிருக்கிறார்.

**ஆக்கத்திறன் 51 - 60**

**பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றைப்பற்றி 75 - 100 சொற்களுக்குள் அமைய எழுதுக.**

1. நீங்கள் அண்மையில் பார்த்து இரசித்த ஒரு நிகழ்ச்சி பற்றிய அனுபவம்.

அல்லது

2. புலம் பெயர் மண்ணில் நமது தாய்மொழியின் எதிர் காலம் எப்படி இருக்கவேண்டும் என்ற உங்கள் எண்ணக் கருத்து.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2014